கிராமசபை கூட்டங்களில் தேவையற்ற கருத்துக்களை கூறுகிறார்

விரக்தியின் விளிம்பிற்கு சென்றுவிட்டார் ஸ்டாலின்: முதல்வர் எடப்பாடி பழனிசாமி தாக்கு

அமைச்சராக இருந்தபோது கிராமங்களுக்கு சென்று குறைகளை தீர்க்க முயற்சித்தாரா?

சேலம், பிப். 2–

தோல்வி மேல் தோல்விகளால் மு.க.ஸ்டாலின் விரக்தியின் விளிம்பிற்கு சென்று விட்டார் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.

அமைச்சராக இருந்தபோது கிராமங்களுக்கு சென்று குறைகளை கேட்டு தீர்த்து வைத்தாரா? என்றும் முதல்வர் காட்டமாக கேட்டார்.

சேலத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

கேள்வி: தொழில் முனைவோர் மாநாடு நடத்தினீர்களே, எவ்வளவு நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது?

11 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு

பதில்: அம்மா 2015ல், தமிழகம் இந்தியாவிலேயே தொழில் துவங்குவதிலே ஒரு முன்னிலை மாநிலமாக திகழவேண்டும் என்பதற்காக தொழில் முனைவோர் மாநாட்டை சென்னையிலே 2015 ல் முதன்முதலாக தொடங்கினார். மிகப்பெரிய வரவேற்பு கிடைக்கப் பெற்றது. இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்த தொழிலதிபர்கள், வெளிநாட்டில் இருக்கின்ற பல்வேறு நாட்டைச் சேர்ந்த தொழில் அதிபர்களெல்லாம் சுமார் 2 லட்சத்து 42 ஆயிரம் கோடி தமிழகத்திலே தொழில் முதலீட்டைச் செய்தார்கள். அந்த அடிப்படையில் அம்மாவினுடைய அரசு, தொடர்ந்து அதில் கவனமாக செயல்பட்ட காரணத்தாலே, தமிழகத்தில் தொழில் துவங்க உகந்த மாநிலம் தமிழ்நாடு என்று கருதிய காரணத்தினால், புரட்சித்தலைவி கொண்டு வந்த திட்டம் சிறப்பான திட்டம், தமிழகத்திலே சட்டம்–ஒழுங்கு பேணிக் காக்கப்படுகின்றது.

படித்த இளைஞர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். தொழில் துவங்குவதற்கான அனைத்து வசதிகளும் மாநில அரசு சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்று அவர்கள் எண்ணிய காரணத்தினால், நாங்கள் செய்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், எங்கள் நடவடிக்கையை பார்த்து பல தொழில் அதிபர்கள் பலமுறை என்னை சந்தித்துப் பேசினார்கள். அதையெல்லாம் கவனத்தில் கொண்டு அண்மையில் நடைபெற்ற தொழில் முதலீட்டாளர் மாநாட்டிலே சுமார் 3 லட்சத்து 431 கோடி ரூபாய் தொழில் முதலீடு செய்வதற்காக முன்வந்து, 304 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கின்றது. இது ஒரு வரலாற்றுச் சாதனை. அம்மா அரசிற்கு கிடைக்கப் பெற்ற பெரிய வெற்றி. அதுமட்டுமல்லாமல் கிட்டத்தட்ட நேரடியாக 5 லட்சம் நபர்களுக்கும், மறைமுகமாக 5 லட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு வேலை கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். மொத்தம் 10 லட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

யாருடன் கூட்டணி

கேள்வி: இப்பொழுது தேர்தல் வர இருக்கின்றது. கூட்டணி பற்றி...

பதில்: நான் ஏற்கனவே தெளிவாக சொல்லியிருக்கின்றேன். தேர்தல் அறிவித்த பிறகுதான் கூட்டணி பேச்சுவார்த்தை துவங்கும். கூட்டணி ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு உருவாகும். ஏனென்று சொன்னால், ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு பகுதியிலே பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் அண்ணா தி.மு.க.வைப் பொறுத்தவரைக்கும், தேர்தல் அறிவித்த பிறகுதான் கூட்டணி பேச்சுவார்த்தை துவங்கும். அம்மா இருக்கும்பொழுது, வேட்பாளர்களை தேர்வு செய்வதற்காக முன்கூட்டியே அறிவிப்பு செய்வார். அதன் அடிப்படையிலே அண்ணா தி.மு.க. சார்பாக போட்டியிடகின்ற கழக வேட்பாளர்கள், எந்த நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட வேண்டும் என்ற விருப்ப மனுவை தருகின்றார்களோ அந்தத் தொகுதியில் வேட்பு மனு கட்டணத்துடன் அந்த வேட்பு மனுவை பூர்த்தி செய்து, தலைமைக் கழகத்தில் சேர்ப்பதற்கு 4ம் தேதியிலிருந்து 10ம் தேதி வரை கால அளவு கொடுக்கப்பட்டு, அந்த கால அளவுக்குள் தாங்கள் போட்டியிட விரும்புகின்ற தொகுதியில் அவர்கள் விருப்ப மனு அளிப்பார்கள்.

பாராட்டு குவிகிறதே...

கேள்வி: அரசு ஊழியர்களின் போராட்டத்தை நீங்கள் ஒடுக்கியது உண்மையாக, உங்களுக்கு பாராட்டுகள் குவிகிறது. இருந்தாலும் அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை ...

பதில்: நீங்கள் கேட்பதே தவறான கேள்வி. ஒடுக்கப்பட்டது என்ற வார்த்தை தவறான வார்த்தை. அரசு ஊழியர்கள் போராட்டத்தை ஒடுக்குவது என்பது தவறான வார்த்தை, திருத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் உரிமைக்காக குரல் கொடுக்கிறார்கள் அவ்வளவு தான், ஒடுக்கப்பட்டது என்பதெல்லாம் தவறு. இது ஒரு மிகப் பெரிய ஜனநாயக நாடு. ஜனநாயக நாட்டிலே அவரவர்களது உரிமையை பெறுவதற்கு அவர்கள் கோரிக்கை வைப்பார்கள். அதன் அடிப்படையில் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். எது நியாயமான கோரிக்கையோ, அதை அரசு நிறைவேற்றும்.

ஏற்கனவே அம்மாவின் அரசு 7வது ஊதியக் குழு பரிந்துரையின்படி, அந்த ஊதிய உயர்வு முறைப்படி அறிவிக்கப்பட்டு, அந்த ஊதியக் குழு பரிந்துரையின்படி ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல அகவிலைப்படி மத்திய அரசு அறிவித்தது. அதையும் அம்மாவினுடைய அரசு வழங்கி வருகிறது. ஆகவே, நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த பழைய ஓய்வூதியத் திட்டம் என்பது 2003ம் ஆண்டிற்கு முன்பு இருந்தது. 2003ம் ஆண்டிற்குப் பிறகு, புதிய ஓய்வூதியத் திட்டம் தான் அமல்படுத்தும் என்று அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டு, அந்த அடிப்படையில் தான் ஊழியர்கள் சேர்க்கப்படுகின்றார்கள். 2003ம் ஆண்டிற்குப் பிறகு பணியில் சேருகின்ற அரசு ஊழியர்களானாலும், ஆசிரியர்களானாலும் புதிய ஓய்வூதியத் திட்டத்தின் அடிப்படை யில்தான் பணியில்சேருகின்றார்கள். தெரிந்துதான் அவர்கள் சேருகின்றார்கள். ஆகவே, அந்த அடிப்படையில்தான் அரசு தொடர்ந்து கடைபிடிக்கிறது.

கேள்வி: அவர்கள் மீதான நடவடிக்கை எப்படி இருக்கும்?

பதில்: யார் போராட்டம் செய்தாலும் சரி, நீங்கள் போராட்டம் செய்தாலும் சரி, ஆசிரியர்கள் போராட்டம் செய்தாலும் சரி, மற்ற அமைப்புகள் போராட்டம் செய்தாலும் சரி, பல்வேறு அரசியல் கட்சிகள் அவர்களது கோரிக்கைகளை வைத்து போராட்டம் நடக்கின்ற பொழுது சட்டரீதியாக எடுக்கப்படும் நடவடிக்கைதான், அவர்கள் மீதும் எடுத்திருக்கிறோமே தவிர வேறு எதுவும் கிடையாது.

கேள்வி: ஸ்டாலின் கிராமசபை கூட்டங்களில் சென்று, அரசு எதுவும் செய்யவில்லை, உள்ளாட்சித் தேர்தல் நடத்தவில்லை என்று தொடர்ந்து விமர்சித்து வருகிறாரே?

உண்மை தான் வெல்லும்

பதில்: என் மீது விமர்சனம் செய்வதற்கும், கிராம சபை கூட்டத்திற்கும் சம்பந்தமே கிடையாது. அவருடைய திட்டம் என்னவென்றால், எங்களைத் தாக்கி பேசவேண்டும் என்பதற்காகத் தான் இந்த கிராம சபை கூட்டத்தை பயன்படுத்துகிறாரே தவிர, மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற அடிப்படையில் இந்த கிராம சபை கூட்டம் நடைபெறுவதாகத் தெரியவில்லை. நீங்கள் கேட்கும் கேள்வியிலேயே அந்தப் பொருள் தான் அடங்கியிருக்கிறது. உண்மையிலேயே கிராமப்புற மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்றால், அங்கிருக்கிற பிரச்சினையை பேசினால் சரியாக இருக்கும். அதை விட்டுவிட்டு, அவர் ஏதேதோ பேசிப் பார்த்தார், எத்தனையோ போராட்டங்களை தூண்டிவிட்டார், எத்தனையோ பொய் வழக்குகள் போடுவதற்கு முயற்சி செய்தார். அத்தனையும் தோல்வியில் முடிந்துவிட்டது. என்றைக்கும் உண்மை தான் வெல்லும், தர்மம் தான் வெல்லும், நீதி தான் வெல்லும்.

அந்த அடிப்படையிலே, அவர்கள் போட்டது அத்தனையுமே பொய்த்து விட்டது. அந்த காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அந்த கிராம சபை கூட்டத்தில், தேவையற்ற கருத்துக்களை அவர் பேசி வருகிறார். அவர் விரக்தியின் விளிம்பிற்கு சென்று விட்டார். வேறு ஒன்றும் கிடையாது. அவர் கிராம சபை கூட்டத்தில் நான் எல்லா கிராமத்திற்கும் போய்விட்டு வந்தேன் என்கிறார். எத்தனை முறை நம்முடைய மாவட்டத்திற்கு வந்தார்? அவர் சொன்னார், கிராமம் தான் கோயில் என்று. நல்ல வேளை இப்பொழுதுதான் அவருக்குத் தெரிந்திருக்கிறது கிராமம் தான் கோயில் என்று. இவர் ஆளுகின்ற தரப்பில் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த பொழுது, அவருடைய பணிகள் என்ன? கிராமமானாலும், நகரமானாலும், பேரூராட்சியானாலும், மாநகராட்சியானாலும் சரி, அந்தப் பகுதியில் இருக்கின்ற அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்கின்ற பணி அந்தத் துறைக்கு இருந்தது. அந்த துறைக்கு அமைச்சராக மு.க.ஸ்டாலின் இருந்தார். என்ன செய்தார்?

அங்கு கூட்டுக் குடிநீர் திட்டம் இல்லை, லைட் இல்லை, ரோடு இல்லை என்கிறார். உங்களை ஆட்சியிலே அமர்த்தி உள்ளாட்சித் துறை அமைச்சராக பொறுப்பும் கொடுத்து, அதிலும், பதவியில் இருந்த காலத்தில் ஏன் செய்யவில்லை என்பதுதான் நம்முடைய கேள்வி.

அம்மாவின் அரசைப் பொறுத்தவரைக்கும், கடந்த கால தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற பணியில், அம்மா தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகும் சரி, அம்மா மறைவிற்குப் பிறகும் அம்மாவினுடைய அரசு எடுத்த நடவடிக்கையையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவருடைய காலத்தில் கிராமம் எந்த அளவிற்கு இருந்தது. அம்மா முதலமைச்சராக இருந்த காலத்திலே கிராமத்தில் இருக்கின்ற பணிகள் எப்படி நடைபெற்றது.

அம்மா மறைவிற்குப் பிறகு அம்மாவின் அரசு தொடர்ந்து அதை நடைமுறைப்படுத்தி மக்களுக்கு நன்மைகளை எப்படி செய்தது என்பதை சீர் தூக்கிப் பார்த்தாலே, தி.மு.க. ஆட்சிக்காலம் சிறந்ததா? அல்லது அம்மாவுடைய ஆட்சிக் காலமும் சரி, அம்மா மறைவிற்குப் பிறகு அம்மாவினுடைய அரசு செய்த சாதனைகள் சிறந்ததா என்று மக்கள் ஒப்பிட்டுப் பார்த்து, வருகின்ற தேர்தலில் மக்கள் நல்ல தீர்ப்பை அளிப்பார்கள்.

கருத்துக் கணிப்பு

கேள்வி: தேர்தல் தொடர்பான கருத்துக் கணிப்புகள் பற்றி ...

பதில்: எந்த கருத்துக் கணிப்பு எந்த டிவி சொன்னது என்று சொல்லுங்கள். நான் விளக்கம் சொல்கிறேன். கருத்துக் கணிப்பென்றால் அண்மையில் தந்தி டிவி அறிவித்தது. ஒரு தொகுதிக்கு இரண்டரை லட்சம் ஓட்டு இருக்கிறது. அதில் 500 பேரை தேர்ந்தெடுத்து அந்த அடிப்படையில் வைத்து இவர்களுக்கு இவ்வளவு, இவ்வளவு சதவிகிதம் என்று சொல்கிறார். எப்படி தேர்ந்தெடுத்தார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

உதாரணத்திற்கு, 2016 சட்டமன்றத் தேர்தல் தொடர்பாக தந்தி டி.வி. கருத்துக் கணிப்பை வெளியிட்டது. அப்பொழுது நான் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்து எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் அண்ணா தி.மு.க. வேட்பாளராக அம்மாவினால் அறிவிக்கப்பட்டு, நான் எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளராக போட்டியிட்டேன். எடப்பாடி பழனிசாமி எடப்பாடி தொகுதியில் தோற்பார் என்று அவருடைய கருத்துக் கணிப்பில் வெளியிட்டார். தேர்தல் முடிந்த பிறகு, 42000 ஓட்டு வித்தியாசத்தில் நான் வெற்றி பெற்றேன். சேலத்திலேயே அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவன் நான். அவருடைய கருத்துக் கணிப்பு எப்படி இருந்தது? அவருடைய கருத்துக் கணிப்பு பொய்யானது.

கருத்துத் திணிப்பு

சில பேரை திருப்திப்படுத்துவதற்காக அறிவிக்கப்பட்ட இந்த கருத்துக் கணிப்பு. இது கருத்துக் கணிப்பல்ல, கருத்துத் திணிப்பு. அதுமட்டுமல்ல, சேலம் மாவட்டத்தில் மூன்றே தொகுதியில் தான் வெற்றி பெறும் என்று சொன்னார்கள். 10 தொகுதியில் வெற்றி பெற்றோம். பல்லாயிரக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் பல தொகுதிகளில் நாங்கள் வெற்றி பெற்றோம். நாமக்கல் மாவட்டத்தில் குமாரபாளையத்தில் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் தோற்பார் என்று தினத்தந்தி கருத்துக் கணிப்பில் வெளியிட்டார்கள். அவர் 48 ஆயிரம் வாக்குகளில் வெற்றி பெற்றார். ஆகவே, அவருடைய கருத்துக் கணிப்பு எந்த அளவிற்கு பொய்யானது என்பதை மக்கள் அறிவார்கள்.

கேள்வி: இடைக்கால பட்ஜெட்டை தம்பிதுரை புறக்கணித்திருக்கிறாரே?

பதில்: இதுவரையில் அதைப்பற்றி தகவல் வரவில்லை.

சிறை சென்ற ஆசிரியர்கள் நிலை என்ன?

கேள்வி: சிறை சென்ற ஆசிரியர்கள் மீண்டும் பணிக்கு அமர்த்த வாய்ப்பிருக்கிறதா?

பதில்: நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். போராட்டங்கள் நடைபெறுகின்றபொழுது, யார் எந்த தரப்பிலிருந்து போராட்டம் நடைபெற்றாலும், அது எந்த ஆட்சியில் இருந்தாலும், சட்டத்தின்படி அவர்கள் வழக்கு போடுவார்கள், அதுதான் இந்த ஆட்சியிலும் நடந்தது.

கேள்வி: இந்த மத்திய பட்ஜெட்டில் 32 சதவிகித நிதி ஒதுக்கீடு மாநிலத்திற்கு இருந்ததை 42 சதவிகிதமாக ஒதுக்கியிருக்கிறார்கள். நீங்கள் இன்னும் கூடுதலாக கேட்க வாய்ப்பிருக்கிறதா?

பதில்: இன்னும் நான் முழுமையாக படிக்கவில்லை, முழு விவரங்களை சேகரித்த பிறகு, உரிய பதிலை ஊடகத்தின் வாயிலாகவும், பத்திரிகையின் வாயிலாகவும் தெரிவிப்போம்.

அதுமட்டுமல்ல. அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரை, சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு கோடைக் காலமானாலும், அந்த கோடை காலத்தில் குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக, நேற்று என் தலைமையில் துணை முதலமைச்சர், மூத்த அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் பல்வேறு துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டு அந்தக் கூட்டத்திலே, கோடை காலத்தில் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டால் அதை எப்படி சமாளிப்பது, அதற்கு எவ்வளவு நிதி தேவை என்பதையெல்லாம் ஆராய்ந்து, அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்து கோடை காலத்தில் குடிநீர் பிரச்சினையை முழுமையாக தீர்ப்பதற்கு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த அரசு எதைச் செய்தாலும், அதற்கு திமுக எதிர்ப்பு தான் தெரிவிக்கும், எதையும் ஆதரிப்பது போல் தெரியவில்லை.

பொங்கல் பரிசை தடுத்தனர்

அண்மையில் பொங்கல் பரிசுகூட கொடுத்தோம். அந்த பொங்கல் பரிசு கொடுக்கும்போது கூட திமுகவைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞரை வைத்து, நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யச் சொல்லி, தடையாணை வாங்க முயற்சி செய்தார்கள். ஏழை மக்களுக்குக் கொடுக்கக்கூடிய பொங்கல் பரிசுத் தொகையைக் கூட அவர்கள் விரும்பவில்லை. ஏனென்று சொன்னால், நான் ஒரு விவசாயி இருக்கிறேன்.

விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் அதிகம்பேர்விவசாயத்தொழிலாளர்கள் தான். மற்ற தொழில்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் தான் அதிகமாக பொங்கல் பண்டிகையை கொண்டாடுகிறார்கள். அவர்களும் மகிழ்ச்சியோடு பொங்கல் பண்டிகையை கொண்டாட வேண்டும் என்பதற்காகத் தான் இந்த பொங்கல் பரிசை அறிவித்தோம். அதைக் கூட தடை செய்வதற்கு, தி.மு.க.வைச் சார்ந்த மு.க.ஸ்டாலின் தங்களுடைய கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞரை தூண்டிவிட்டு, உயர்நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்து அதற்கு தடையாணை வாங்க முற்பட்டார். ஆனால் கடினமாக ரத்தத்தை வேர்வையாக மண்ணில் சிந்தி விவசாயத் தொழிலாளர்களுக்கு இறைவன்அருள்புரிந்து, நீதிமன்றத்தில் தடை வழங்கப்படாமல் அவர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கப்பட்டது.

இன்றைக்கு, தொழிற்சாலைகளில் பணிபுரிகின்றவர்களுக்கு எல்லாம் சம்பளம் மற்றும் போனஸ் வழங்கப்படுகிறது. ஆனால், விவசாயத் தொழிலாளிக்கு என்ன கொடுக்கின்றார்கள்? வறட்சி என்றால் அவர்களுக்கு வேலை கிடைக்காது, புயல் வெள்ளம் வந்தால் அவர்கள் வேலைக்கு செல்ல முடியாது. இப்படிப்பட்ட இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்படுகின்ற விவசாயிகளுக்கு பொங்கல் காலங்களில் இப்படிப்பட்ட பரிசு கொடுப்பது சரியாக இருக்கும் என்று அண்ணா தி.மு.க. அரசு கருதி தான், இந்தப் பொங்கல் பரிசை மனிதாபிமான முறையில் நாங்கள் அறிவித்தோம்.

நிழலில் இருப்பவர்களுக்கு கஷ்டம் தெரியாது. விவசாயப் பணி எவ்வளவு கடினமான பணி என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால், நான் விவசாயப் பணி செய்தவன். இதை உணர வேண்டும். சிலபேர், அரசாங்கப் பணத்தை தவறாக பயன்படுத்தியிருக்கிறீர்கள் என்றெல்லாம் குரல் கொடுக்கிறார்கள். அது உண்மையிலேயே தவறு. ஏழைகளுக்கு கொடுப்பது எந்த ஆட்சியாக இருந்தாலும் அதைப் பாராட்ட வேண்டும். பாராட்டுவதற்கு மனம் வர வேண்டும். ஏழைகள் தான் உழைப்பாளிகள். எந்த ஒரு அரசு உழைப்பாளிகளுக்கு மதிப்பு கொடுக்கிறதோ, அந்த அரசு சிறந்த அரசு. அந்த அடிப்படையிலே அண்ணா தி.மு.க. அரசு, ஏழைகளுக்காக தொடர்ந்து இன்னும் பல்வேறு நன்மைகளை செயல்படுத்தும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் பிப்ரவரி மாதம் முழுவதும் நடைபெறும் ''தமிழ்த்தாய் – 71'' தமிழாய்வுப் பெருவிழாவில் முதல் நாள் நிகழ்ச்சியில் அண்ணா அறக்கட்டளை சார்பில் இதயகீதம் ராமானுஜம் எழுதிய 'அண்ணாவின் மடல் இலக்கியம்' என்னும் புத்தகத்தை அமைச்சர் க.பாண்டியராஜன் வெளியிட்டார். தாவரவியல் அறிஞர் பஞ்சவர்ணம் பெற்றுக் கொண்டார். தமிழ் வளர்ச்சி துறை அமைச்சர் மற்றும் உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் கோ. விசயராகவன், ந. அருள், பாரதி சுகுமார், பாலரமணி ஆகியோர் உடன் உள்ளனர்.

NAME CHANGE

பாக்கியமேரி.எம் ஆகிய நான் த/பெ.மரிய சுசை
பிறந்த தேதி: 10/02/1981
சொந்த ஊர்: சென்னை
வசிக்கும் இடம்: 12/40, முதல் மாடி, 9வது தெரு, பாடி புதூர் நகர், சென்னை, தமிழ்நாடு, இந்தியா-600101
இனி மரியம் என்று அழைக்கப்படுவேன்
-பாக்கியமேரி.எம்

பைவ் கோர் எக்ஸிம் லிமிடெட்
(அரும் சாப்ட் சிஸ்டம்ஸ் லிமிடெட் என்று முன்னர் அழைக்கப்பட்டது)
L32200TN1994PLCO26958
பதிவு அலுவலகம்: சிட்டி சென்டர் பிளாசா, 3வது தளம் அறை எண். 7/48, அண்ணா சாலை, சென்னை–600 002. Tel: (91) - 7042292838,
Email: manager.roc@5core.in, Website: www.fivecoreexim.com

அறிவிப்பு

[illegible]

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
பைவ் கோர் எக்ஸிம் லிமிடெட்டுக்காக
தேதி: 1 பிப்ரவரி, 2019
இடம்: சென்னை

GOVERNMENT OF TAMIL NADU
FISHERIES DEPARTMENT
NATIONAL COMPETITIVE BIDDING (NCB)
IFB Notice No.: 4/ DB / F114 N / 2019 Dated: 29.01.2019
The Chief Engineer, Fisheries Department, Animal Husbandry & Fisheries Department Building, Nandanam, Chennai - 35, invites sealed bids for the work "Construction of Marine Finfish seed rearing Unit at Mandapam in Ramanathapuram District" upto 15.00 hours on 05.03.2019. The details can be had at the website "www.tenders.tn.gov.in".
Chief Engineer,
Fisheries Department,
Chennai - 35
DIPR / 742 / TENDER / 2019

கோதி பிளாஸ்கான் (இந்தியா) லிமிடெட்
CIN :L45400TN1994PLC028895
Website :www.gothiplascon.com e-mail : plascon747@gmail.com
Phone : 0413 - 2271151
அறிவிப்பு
[illegible]
இந்த அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.gothiplascon.com-ல் உள்ளது.
இடம்: சென்னை
தேதி: 01/02/2019
கோதி பிளாஸ்கான் (இந்தியா) லிமிடெட்டுக்காக
கம்பெனி செயலாளர்

Sicagen
சிகாஜென் இந்தியா லிமிடெட்
அறிவிப்பு
[illegible]
www.sicagen.com www.bseindia.com www.nseindia.com
சிகாஜென் இந்தியா லிமிடெட்டுக்காக
Sd/-
01.02.2019
சென்னை
G அருண்மொழி
நிறுவன செயலாளர்

பிற்சேர்க்கை IV
(விதி 8 (1) பார்க்கவும்)
உடைமை அறிவிக்கை
(அசையா சொத்துக்காக)

அவ்வாறிருக்கையில்,

கீழே கையொப்பமிட்டப்பட்டுள்ள இந்தியாபுல்ஸ் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (CIN: L65922DL2005PLC136029) [illegible] 24.10.2018 [illegible] 23.10.2018 [illegible] HHLPOR00241603 [illegible] ரூ. 6,12,305/- (ரூபாய் ஆறு லட்சம் பனிரெண்டாயிரத்து முன்னூற்று ஐந்து மட்டும்) [illegible] 29.01.2019 [illegible]

அசையா சொத்தின் விவரம்:

தமிழ்நாடு, காஞ்சிபுரம்-600114 ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, [illegible]

தேதி : 29.01.2019
இடம் : காஞ்சிபுரம் (தமிழ்நாடு)
அங்கீகாரம் பெற்ற அதிகாரி
இந்தியாபுல்ஸ் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட்